MAALAI MURASU

PAGE NO: 02

DATE: 29.08.2023

புதுவை பல்கலைக்கழகத்தில்

# முதுநிலை படிப்புகளுக்கு நேரடி மாணவர் சேர்க்கை

புதுச்சேரி, ஆக.29—

புதுவை பல்கலைக்கழகத்தில் நாளை (புதன்கிழமை) காலை 10 மணிக்கு கியூட் தேர்வு அடிப்படையில் பல்வேறு 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகளுக்கு நேரடி மாணவர் சேர்க்கை நடக்கிறது.

பல்கலைக்கழகத்தில் சேர விரும்பும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட துறை தலைவர்களிடம் நேரடியாக தகவல் தெரிவிக்கலாம். பின்னர் தரவரிசையின்படி காலியிடங்களுக்கு மாணவர் சேர்க்கை நடைபெறும். மாணவர்கள் அசல் சான்றிதழ்களுடன் வரவேண்டும்.

நேரடி சேர்க்கையின்போது விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுக்க விருப்ப தேர்வு பல்கலைக்கழக இணைய தளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தகவலை உதவி பதிவாளர் மகேஷ் தெரிவித்துள்ளார்.

DINAMALAR

29 AUG 2023

PAGE 4

# புதுச்சேரி பல்கலையில் நாளை நேரடி சேர்க்கை

**புதுச்சேரி, ஆக. 29–**

புதுச்சேரி பல்கலையில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுநிலை படிப்புகளுக்கு நாளை (30ம் தேதி) நேரடி சேர்க்கை நடக்கிறது.

இது குறித்து பதிவாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு;

புதுச்சேரி பல்கலையில் காலியாக உள்ள இளநிலை மற்றும் முதுநிலை படிப்புகளுக்கான காலியிடங்கள் கியூட் நுழைவு தேர்வு மதிப்பெண் அடிப்படையில் நிரப்பபப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகளுக்கு நாளை (30ம் தேதி) காலை 10 மணிக்கு நேரடி சேர்க்கை நடக்கிறது.

இதில் பங்கேற்க விருப்பம் உள்ளவர்கள் யூ.ஜி., கியூட் தேர்வு மதிப்பெண்ணுடன் பல்கலை துறைகளை நேரில் அணுகலாம். இந்த ஸ்பாட் அட்மிஷன் கியூட் ரேங்கிங் அடிப்படையில் நிரப்பப்படும் என்பதால், மாணவர்கள் ஒரிஜனல் சான்றிதழ்களுடன் வர வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு www.pondiuni.edu.in/admissions - 2023-24 என்ற இணைய முகவரியை பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

DINA THANTHI

29 AUG 2023

PAGE 13

# புதுவை பல்கலைக்கழகத்தில் நேரடி மாணவர் சேர்க்கை

## நாளை நடக்கிறது

புதுச்சேரி, ஆக.29-

புதுவை பல்கலைக்கழகத்தில் ஒருங்கிணைந்த 5 ஆண்டு முதுகலை பட்டபடிப்புகளில் காலியாக உள்ள இடங்களுக்கு கியூட் தேர்வின் அடிப்படையில் நேரடி மாணவர் சேர்க்கை நாளை (புதன்கிழமை) காலை 10 மணிக்கு நடக்கிறது.

இதில் சேர விரும்பும் மாணவர்கள் நேரடியாக துறை தலைவர்களை சந்தித்து சேரலாம். அத்துடன்தேவையான அனைத்து அசல் சான்றிதழ்களுடன் வரவேண்டும். நேரடி மாணவர் சேர்க்கை குறித்து விவரங்கள் புதுவை பல்கலைக்கழக இணையதளமான *www.pondiuni.edu.in/admissions-2023-24-ல்* வெளியிடப்பட்டுள்ளது.

DINAKARAN

29 AUG 2023

PAGE 13

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகளுக்கு நேரடி மாணவர் சேர்க்கை

## நாளை நடக்கிறது

**புதுச்சேரி, ஆக. 29:** புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகளுக்கு நாளை (30ம் தேதி) நேரடியாக மாணவர் சேர்க்கை நடக்கிறது.

இதுகுறித்து புதுவை பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நாளை (30ம் தேதி) காலை 10 மணிக்கு கியூட் (யூஜி)-2023 தேர்வு முடிவுகளின் அடிப்படையில், பல்வேறு 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுகலை படிப்புகளுக்கு நேரடி (ஸ்பாட்) மாணவர் சேர்க்கை மூலம் காலி இடங்களை நிரப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. கியூட் (யூஜி)-2023ஐ அடிப்படையாக கொண்ட 2023-24ம் கல்வி ஆண்டிற்கான ஒருங்கிணைந்த முதுகலை படிப்புகளில் சேர்க்கை பெற விரும்பும் ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட துறை தலைவரிடம் நேரடியாக தகவல் தெரிவிக்கலாம். பின்னர், தரவரிசையின் படி காலியிடங்களுக்கு மாணவர் சேர்க்கை நடைபெறும். விண்ணப்பதாரர்கள் தேவையான அனைத்து அசல் சான்றிதழ்களுடன் வர வேண்டும்

நேரடி சேர்க்கையின் போது விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுப்பதற்கான விருப்பத்தேர்வுகள் பல்கலைக்கழக இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், விண்ணப்பதாரர்கள் *www.pondiuni.edu.in/admissions-2023-24/* என்ற பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டை பார்த்து தகுதிக்கான அளவுகோல்கள் மற்றும் பாடப்பிரிவுகள் குறித்து தெரிந்து கொள்ளவும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.